www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 030

18 ஓகஸ்ட் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# தேசியத் தலைவரை இழிவுபடுத்தும் சிங்கள உளவாளி சிவரஞ்சன்!



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சிங்கள அரசின் உளவாளியாக கறுப்பின் புலனாய்வுப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்டு மக்களிடம் அம்பலப்படுத்தப்பட்ட தேசவிரோதி சிவரஞ்சன், கே.பியுடன் இணைந்து தான் செயற்படுவதை ஒப்புக்கொண்டுள்ளார்.

தமிழீழ தேசியத் தலைவரை மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சித்து, சிங்கள அரசின் இந்த உளவாளி மதுபோதையில் தனது நண்பருடன் உரையாடிய பொழுது எமது புலனாய்வுப் பிரிவினரால் பதிவு செய்யப்பட்ட ஒலிப் பதிவு வடிவத்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

இதில் தமிழீழ தேசியத் தலைவரை அவமதித்து எக்காளமிடும் இந்த சிங்கள உளவாளி, தேசவிரோதி கே.பி செய்வது அனைத்தும் சரி என்று கூறுவதோடு, அனைத்துலக தொடர்பகத்தின் பொறுப்பாளர் மணிவண்ணன் (கஸ்ரோ) அவர்களையும் இழிவுபடுத்துகின்றார்.

அத்துடன் தமிழீழ தேசியக் கொடியை பயன்படுத்தக்கூடாது என்று கூறும் இந்த சிங்கள உளவாளி, தமிழீழ தேசியக் கொடியைப் பயன்படுத்துவது நேரத்தை விரயமாக்கும் செயல் என்றும் கூறுகின்றார்.

இலண்டனுக்கு வெளியேயுள்ள லிவர்பூல் பகுதியில் வசித்து வரும் இந்த உளவாளி, அடிக்கடி இலண்டன் சவுத் ஹரோ பகுதியில் உள்ள மல்வேர்ண் அவனியூ என்ற இடத்திற்கு வந்து செல்வதோடு, பல தமிழ்த் தேசிய உணர்வாளர்களை கண்காணித்து, அவர்கள் தொடர்பான தகவல்களை சிங்கள அரசுக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் பெண் போராளிகளை குறிவைக்கும் சிங்கள உளவாளிகள்!

எதிரியின் நரிக்கூட்டங்கள் பலர் எம்மவர்களுக்குள் ஒளிந்திருக்கின்றார்கள். நீங்கள் உங்கள் தொடர்பாகவோ அல்லது உங்களின் பூர்வீகம் தொடர்பாகவோ மற்றவர்களுடன் கதைக்கும் பொழுது கவனமாகக் கதையுங்கள். விடுதலைப் போராட்ட வரலாறுகளை கதைக்கும் பொழுதும் அவதானமாகக் கதையுங்கள். தமது முள்வேலி முகாம்களில் சிக்கியிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற முன்னாள் பெண் போராளிகளை குறிவைத்து தனது உளவாளிகளை சிங்கள அரசு களமிறக்கியுள்ளது. இவ்வாறுதான் முன்னாள் பெண் போராளி ஒருவர் இறுதிவரை போராடி தனது கை ஒன்றினை இழந்த நிலையில் அயல்நாடொன்றிற்கு சென்று வாழ்ந்து வருகின்றார். இவருக்கு இவரது குடும்பத்தினர் வரன் தேடிய பொழுது, விளம்பரத்தரகர்கள் ஊடாக இவர்களை அணுகிய சிங்கள அரசின் உளவாளி ஒருவர், இந்த முன்னாள் பெண் போராளியை திருமணம் செய்வதற்கு இணங்கியிருந்தார். அவர் தான் சுவிஸில் குடியுரிமை பெற்றவர் என்றும், தான் திருமணம் செய்து தனது நாட்டிற்கு அந்தப் பெண் போராளியைக் கூட்டிக் கொண்டு போவதாகவும் கூறி குறிப்பிட்ட பெண் போராளி இருந்த நாட்டிற்கு சென்றிருந்தார். குறிப்பிட பெண், முன்னர் போராளியாக செயற்பட்டமையும், இறுதியில் களத்தில் தனது கையை இழந்தமையும் இவருக்கு நன்கு தெரியும்.

அவ்வாறு இந்தப் பெண் தங்கியிருந்த நாட்டை சென்றடைந்த சிங்கள உளவாளி, பெண் போராளியை திருமணம் செய்வதாகக்கூறி, அவருடன் உரையாடி, வன்னியில் இறுதிக் கட்டத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளக விடயங்கள் தொடர்பாகவும் தகவல்களை திரட்டிய பின்னர், அந்தப் பெண் போராளியைக் கைவிட்டு மீண்டும் சுவிஸிற்கு சென்றுள்ளார். இந்த நபர் நீண்ட காலமாகவே சுவிஸில் சிங்கள அரசின் உளவாளியாக செயற்பட்டமை பின்னரே பெண் போராளியின் குடும்பத்திற்கு தெரிய வந்துள்ளது.

**"கறுப்பு – துரோகங்களின் கருவறுப்பு"**

www.tamilarangam.net



## தமிழீழ தேசியக் கொடியை மாற்றுவதற்கு நாடுகடந்த கும்பல் திட்டம்!



தமிழீழ தேசியக் கொடியாகிய புலிக்கொடியைக் கைவிட்டு, புதிய கொடி ஒன்றை வடிவமைப்பதற்கு நரிகேசி உருத்திரகுமாரனின் தலைமையிலான நாடுகடந்த கும்பல் நடவடிக்கை எடுத்திருப்பதாக கறுப்பிற்கு நம்பகமான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கான ஏற்பாடுகளில் நாடுகடந்த கும்பலின் பாதுகாப்புத்துறை அமைச்சராக விளங்கும் இலண்டனில் உள்ள ஜனகன் மாஸ்ரர் (தயாபரன்) ஈடுபடுவதாக தெரிய வருகின்றது.

கே.பி - வி(நாய்)யகம் - இராமு.சுபன் குழுவினர் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையிலேயே இந்த முடிவை நரிகேசி உருத்திரகுமாரன் எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சிறீலங்கா படை தளபதிகளுடன் நாடுகடந்த கும்பலின் சுவிஸ் உறுப்பினர்கள் தொடர்பு!



நரிகேசி உருத்திரகுமாரனின் தலைமையிலான நாடு கடந்த கும்பலின் சுவிஸ் உறுப்பினர்கள் சிலர், சிங்கள படை தளபதிகளுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது படை தளபதிகளை இராசதந்திரிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கும் சிங்கள அரசு, இவர்கள் ஊடாக நரிகேசி உருத்திரகுமாரனின் சுவிஸ் பிரதிநிதிகளுடன் உரையாடி வருகின்றது.

இவர்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளில் சுவிஸ் குலம், கிருஸ்ணா அம்பலவாணர் போன்றவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

## வர்த்தக விளம்பரங்கள் மற்றும் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

